**செய்தி வெளியீடு எண்: 10/2022** **நாள்: 26.02.2022**

## பத்திரிக்கை செய்தி

## திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (26.02.2022) மெல்லிசை கலை நிகழ்ச்சி நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழா (Azadi ka Amrut Mahostav) மற்றும் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை" கலை குழுவுடன் இணைந்து இன்று 26.02.2022 (சனிக்கிழமை) திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மெல்லிசை கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

இதனை தொடர்ந்து, வருகின்ற 28.02.2022 (திங்கள்கிழமை) "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை" கலை குழுவின் மெல்லிசை கலை நிகழ்ச்சி உயர் நீதிமன்றம் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**